**Dominic Perrottet**
Premier of NSW

**Brad Hazzard**
Minister for Health

# MEDIA RELEASE

புதன்கிழமை, 20 ஏப்ரல் 2022

## கோவிட் அமைப்புகளின் புதுப்பித்த அறிவிப்புகள்

உறுதிப்படுத்தப்பட்ட ஒரு கோவிட்-19 நோயாளியின் நெருங்கிய தொடர்புகள் (close contacts), நியூ சவுத் வேல்ஸ் சுகாதார வழிகாட்டுதல்களுக்கு உடன்படும் பட்சத்தில், தனிமைப்படுத்தப்பட வேண்டிய அவசியமில்லை என்று நியூ சவுத் வேல்ஸ் அரசாங்கம் இன்று அறிவித்துள்ளது.

பாதிப்புக்குள்ளான நோயாளிகளுக்கு எந்தவித மாற்றமும் இல்லை: விரைவான காப்பூக்கிச் சோதனை (RAT) அல்லது பி.சி.ஆர் (PCR) பரிசோதனை முடிவில் நேர்மறையான முடிவைப் பெற்றுள்ள அனைவரும் ஏழு நாள் தனிமையில் இருக்க வேண்டிய தேவை தொடர்ந்து இருக்கும்.

ஏப்ரல் 22 வெள்ளிக்கிழமை மாலை 6 மணி முதல், நெருங்கிய தொடர்புகளுக்கு (வீட்டுத் தொடர்பு அல்லது நியூ சவுத் வேல்ஸ் சுகாதாரத்துறை மூலம் நெருங்கிய தொடர்பாளராகக் கருதப்படும் ஒரு நபர் என வரையறுக்கப்படுகிறது), எந்த அறிகுறிகளும் இல்லாத பட்சத்தில், அத்துடன் பின்வரும் வழிகாட்டுதல்களுக்கு உடன்படும் பட்சத்தில், தனிமைப்படுத்தப்பட வேண்டிய தேவையில்லை:

- சிறப்பு விலக்கு ஒன்று இல்லாத வரையில், முதியோர் பராமரிப்பு, மருத்துவமனைகள், உடல் குறைபாடு மற்றும் சீர்திருத்த இடவசதிகளுக்குச் **செல்ல வேண்டாம்;**
- வீட்டிற்கு வெளியே உள்ளிட அமைப்புகளில் முகக்கவசம் ஒன்றை அணியவும்;
- சாத்தியப்படும் நிலைமைக்கேற்ப, வீட்டைச் சாராத வெளியாட்களுடன் நெருக்கமாகத் தொடர்பு கொள்வதற்கு முன் தினசரி விரைவான காப்பூக்கிச் சோதனைகளை (RAT) மேற்கொள்ளவும்;
- முதியவர்கள் மற்றும் நோயெதிர்ப்புக் குறைபாடுள்ள (immunocompromised) நபர்களுடன் தொடர்பு கொள்வதை முடிந்தவரை தவிர்க்கவும்;
- சாத்தியப்பட்டால், வீட்டில் இருந்து கொண்டே வேலை பார்க்கவும்;
- அவர்கள் ஒரு நெருங்கிய தொடர்பாளர் என்பதையும், மேலே

கூறப்பட்டவைகளுக்கு உடன்படும் பட்சத்தில் தனிமைப்படுத்தப்பட வேண்டிய அவசியமில்லை என்பதையும் அவர்களது வேலை வழங்குநருக்கு/கல்வி நிலையத்திற்குத் தெரிவிக்கவும்.

தங்கள் வீட்டில் உள்ள ஒரு நபருக்கு கோவிட்-19 நோய்த்தொற்று இருப்பது உறுதிசெய்யப்பட்ட நேரத்திலிருந்து 7 நாட்களுக்கு, நெருங்கிய தொடர்பாளர்கள் மேற்கூறிய வழிகாட்டுதல்களுக்கு உடன்பட வேண்டும்.

முக்கிய பணியாளர்களுக்குத் தடுப்பூசி போடப்பட வேண்டுமென்ற பொதுச் சுகாதார உத்தரவுகள் நீக்கப்படும். மற்ற அதிகார வரம்புகளுக்கு ஏற்ப, தொழில்சார்ந்த வேலை ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பின் (occupational work health and safety) கீழ், அபாய மதிப்பீடுகளின் அடிப்படையில் தடுப்பூசித் தேவைகள் இருக்கும். முதியோர் பராமரிப்பு மற்றும் ஊனமுற்ற தொழிலாளர்களுக்குத் தடுப்பூசி போட வேண்டும் என்ற உத்தரவு தொடர்ந்து அமலில் இருக்கும்.

சம்பந்தப்பட்ட பங்குரிமையாளர்களுடன் (stakeholders) கலந்தாலோசனை செய்யப்பட்டு, வரும் வாரங்களில் விவரங்கள் இறுதி செய்யப்படும்.

தனிமைப்படுத்தல் விதிகளில் இருந்து முக்கியமான தொழிலாளர்களுக்குச் சிறப்பு விலக்குகள் இனி தேவைப்படாது என்பதே இந்த மாற்றங்களின் பொருளாகும். இருப்பினும், நெருங்கிய தொடர்பாளர்கள் தங்கள் பணியிடங்களில் வேலை வழங்குநர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ள எந்தவொரு கோவிட்-19 பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கும் தொடர்ந்து உடன்பட வேண்டும்.

30 ஏப்ரல் 2022 முதல், தடுப்பூசி போடப்படாத, சர்வதேச நாடு திரும்பும் பயணிகள் தங்கும் விடுதி தொற்றுத்தடைக் காப்பை (hotel quarantine) மேற்கொள்ள வேண்டிய தேவையில்லை. வந்திறங்கிய 24 மணி நேரத்திற்குள் விரைவான காப்பூக்கிச் சோதனையை (Rapid Antigen Test) மேற்கொள்வது மற்றும் நியூ சவுத் வேல்ஸ் சுகாதார வழிகாட்டுதல்களுக்கு உடன்படுவது உட்பட, முழுமையாகத் தடுப்பூசி போடப்பட்ட பயணிகளுக்கான தற்போதைய தேவைகள் தடுப்பூசி போடப்படாத பயணிகளுக்கும் நீட்டிக்கப்படும்.

பொது போக்குவரத்து, விமானங்கள் மற்றும் விமான நிலையங்கள் மற்றும் பயண முனையங்களில் உள்ளிடங்களில் முகக்கவங்களை அணிய வேண்டிய தேவை அப்படியே இருக்கும் அதே நேரத்தில், பொது போக்குவரத்து ஏற்புத்திறனுக்கான (capacity) உச்சவரம்புகளும் நீக்கப்படும்.

நெருங்கிய தொடர்பாளர்களுக்கான தனிமைப்படுத்தல் விதிகளை நீக்குவது பொது அறிவு சார்ந்த மாற்றங்கள், அத்துடன் பெருந்தொற்றிலிருந்து நாம் தொடர்ந்து முன்னேற இது அனுமதிக்கும் என்று நியூ சவுத் வேல்ஸ் முதல்வர் டொமினிக் பெரோட்டட் (Dominic Perrottet) கூறினார்.

"இந்த தனிமைப்படுத்தல் விதிகள் அவசியமாக இருந்தன, ஆனால் நமது வலுவான தடுப்பூசி விகிதங்களுக்கு நன்றி, இன்று அறிவிக்கப்பட்ட மாற்றங்களை நாம்

பின்பற்றலாம்," என்று திரு பெரோட்டெட் (Mr Perrottet) கூறினார்.

"தொழிலாளர் பற்றாக்குறையால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள பல பணியாளர்களுக்கும், மற்றும் வணிகங்களுக்கும் இது உடனடி நிவாரணத்தை வழங்கும், ஏனெனில் அவர்கள் ஒரு வீட்டுத் தொடர்பாளர் என்பதால் மக்கள் தனிமைப்படுத்தப்பட வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்.

"பெருந்தொற்று படிப்படியாக வளர்ச்சியடைய, எங்கள் எதிர்வினையும் அதற்கேற்றார் போல் வளர்ந்துள்ளது, மேலும் தேவையான மாற்றங்களை நாங்கள் பாதுகாப்பாகவும் ஒழுங்குபட்ட வழியிலும் செய்ய முடிந்தமைக்கு மற்றொரு எடுத்துக்காட்டாகும்."

சமூகத்தில் பாதிப்புக்குள்ளாகக்கூடிய உறுப்பினர்களைப் பாதுகாக்க தனிநபர்கள் இன்னும் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்று சுகாதார அமைச்சர் பிராட் ஹஸார்ட் (Brad Hazzard) கூறினார்.

"நாங்கள் இன்னும் ஒரு பெருந்தொற்றில் இருக்கிறோம். கைத் தூய்மை, சமூக ரீதியாக விலகி இருக்க முடியாதபோது முகக்கவசத்தை அணிந்துகொள்ள வேண்டும், மற்றும் உங்களுக்கு நோயறிகுறிகள் இருந்தால் வீட்டிலேயே இருக்க வேண்டும் என்பன போன்ற அடிப்படை விதிகள் இன்னும் நடைமுறையில் உள்ளன," என்று திரு ஹஸார்ட் (Mr Hazzard) கூறினார்.

"மிக முக்கியமாக, உங்களுக்கு இன்னும் நோயறிகுறிகள் இருந்தால், நீங்கள் ஒரு முதியோர் பராமரிப்பு இடவசதிக்கோ, மருத்துவமனைக்கோ அல்லது வயதான உறவினர் ஒருவரைப் பார்க்கவோ செல்லக்கூடாது."

இந்த மாற்றங்களுக்கு ஏற்ப பள்ளி அமைப்புகளை 2 -ஆம் பருவம் தொடங்கும் முன் இறுதி செய்ய, நியூ சவுத் வேல்ஸ் அரசாங்கமும் சுகாதார அதிகாரிகளுடன் இணைந்து பணிபுரிந்து வருகிறது, மேலும் இது தொடர்பான கூடுதல் தகவல்கள், இனி வரும் நாட்களில் வெளியிடப்படும்.

குளிர்காலத்திற்குத் தயாராகும் வகையில், உடல் ஊனமுற்றோர், குழந்தைகள் மற்றும் வீட்டிற்கு வெளியே பராமரிக்கப்படும் இளையோர், பாதிப்புக்குள்ளாகக்கூடிய கலாச்சார ரீதியாகவும் மொழி ரீதியாகவும் வேறுபட்ட (CALD) சமூகங்கள் மற்றும் பழங்குடியினச் சமூகங்கள் உள்ளிட்ட, பாதிப்புக்குள்ளாகக்கூடிய பெருங்குடும்பங்களைப் பாதுகாக்க விரைவான காப்பூக்கிச் சோதனைகள் (RATs) கிடைப்பதையும் நியூ சவுத் வேல்ஸ் அரசாங்கம் தொடர்ந்து உறுதி செய்யும்.

சமூகங்கள் மற்றும் நீதி திணைக்களத்தின் (Department of Communities and Justice) வலுவான சமூகங்கள் முகமைகள் (Stronger Communities agencies) மூலம் இந்த விரைவான காப்பூக்கிச் சோதனைகள் (RATs), தனிநபர்கள் மற்றும் தொடர்புடைய சேவை வழங்குநர்களுக்கு விநியோகிக்கப்படும்.

16 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைவர்கள், கோவிட்-19 தடுப்பூசிகளில் ஏதாவது

ஒன்றை இரண்டாவது தவணையைப் பெற்ற மூன்று மாதங்களுக்குப் பிறகு, நோயெதிர்ப்பு ஊக்கி மருந்தளவைப் (booster dose) பெறலாம். உங்கள் கோவிட்-19 தடுப்பூசியை அல்லது உங்கள் நோயெதிர்ப்பு ஊக்க மருந்தூசியை (booster shot) https://www.nsw.gov.au/covid-19/vaccination/get-vaccinated என்ற இணையதளம் மூலம் நீங்கள் பதிவு செய்யலாம்.

மேலதிகத் தகவல்கள் பின்வரும் இணையதளத்தில் கிடைக்கும்: nsw.gov.au.

**MEDIA: Ian Paterson | Premier | 0438 748 501**
**Nicolette Kormendy | Minister Hazzard | 0429 064 89**